இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 12 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 05 – சனிக்கிழமை 22 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 12 : Thiruvalluvar Year - 2057 - Aavani 05 - Saturday 22 August 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## தென்னகத்தின் விடுதலை உணர்ச்சியை வெளிப்படுத்திய

# தென்மலைப் போர் நாயகன் ஒண்டிவீரன்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஆக.22-**


**“தென்னகத்தின் விடுதலை உணர்ச்சியை வெளிப்படுத்திய தென்மலைப் போர் நாயகனாகத் திகழ்ந்தவர் ஒண்டி வீரன்” என்று அவரது நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டு புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே ஆங்கிலேயப் படைகளுக்கு அடிபணிய மறுத்து, அவர்களை அடித்து விரட்டிய ஒப்பிலா வீரத்துக்குச் சொந்தக்காரரான ஒண்டிவீரன் அவர்களின் நினைவுநாள்.

பூலித்தேவரின் சிறந்த போர்ப்படைத் தளபதியாகவும் தென்னகத்தின் விடுதலை உணர்ச்சியை வெளிப்படுத்திய தென்மலைப் போர் நாயகனாகவும் திகழ்ந்த அப்பெருந்தீரரின் புகழ் அழியாது மக்கள் மனங்களில் வாழும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



## நிர்வாகத் திறனற்ற த.வெ.க. ஆட்சியில்

# டெல்டாவில் குறுவை சாகுபடி முற்றிலும் தோல்வி!

## உரிய நேரத்தில் தண்ணீர் வழங்காததால் விவசாயிகள் கடும் பாதிப்பு!

**தஞ்சாவூர், ஆக. 22-**

**‘டம்மி’ முதல்வர் ஆட்சியின் அலட்சியத்தால் காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. உரிய நேரத்தில் தண்ணீர் வழங்கப்படாததால் நிலங்கள் தரிசாகக் காட்சியளிக்கின்றன.**

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி பருவங்களில் 13 லட்சம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இதற்காக ஆண்டு தோறும் ஜீன் 12ஆம்தேதி மேட்டூர் அணை பாசனத்திற்காக திறக்கப்பட்டு ஜனவரி 26ஆம் தேதி மூடப்படும்.

ஆனால் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட தேதியான ஜீன் 12ஆம்தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. குறுவை சாகுபடி செய்வதற்காக உரிய நேரத்தில் தண்ணீர் வழங்க இயலாத காரணத்தால் காவிரி சமவெளி மாவட்டங்களில் ஏறத்தாழ 80 சதவிகிதத்திற்கு மேல் குறுவை சாகுபடி செய்யப்படாமல் நிலங்கள் தரிசாக கிடக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் இதுவரை 62 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நிலத்தடி நீர் வசதியை பயன்படுத்தி விவசாயிகள் குறுவை சாகுபடி செய்துள்ளனர். இதேபோல் திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் நிலத்தடி நீரை பயன்படுத்தி ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்கள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி உள்ளது. இந்த அசாதாரணமான சூழ்நிலையில் விதைப்பு சான்றின் அடிப்படையில் பயிர் காப்பீடு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கிராமங்களில் பயிர் செய்ய இயலாததற்காக காப்பீட்டு தொகை ஏக்கருக்கு ரூ.9725 காப்பீட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.



### விவசாயிகள் சரமாரி கேள்வி!

இதற்கு அந்தந்த மாவட்ட வேளாண் துறை அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் குறுவை சாகுபடி விதைப்பு சான்று அடிப்படையில் 25 சதவீதத்திற்கும் குறைவாக சாகுபடி செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையில் சாகுபடி செய்ய இயலாத விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை ரூ.9725 வழங்க வேண்டும். ஆனால் இந்த தொகையை பெற்றுத்தராமல் வேளாண்மை துறை அலுவலர்கள் செயலற்று உள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். விதிகளின்படியும், வழிகாட்டுதலின்படியும் காப்பீடு செய்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய 25% பயிர் காப்பீட்டு தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ.9725 பெற்றுத்தராமல் வேளாண்மை துறை அலுவலர்கள் பணியாற்றி வருவது பண்ணையார் நிர்வாகத்தினையே அளிப்பதாக விவசாயிகள் சரமாரியாக கேள்வி எழுப்பி உள்ளனர்.

இந்த நிலையில் களஆய்வு மேற்கொண்ட வேளாண்துறை அலுவலர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர் ஆகிய 3 வட்டாரங்களில் பயிர் செய்ய இயலாததற்காக காப்பீட்டு தொகை தர தகுதியாக விவசாயிகளை கண்டறிந்துள்ளனர். காவிரி டெல்டா மாவட்டங்களில் பல கிராமங் களில் நெல் பயிரிட முடியாத விவசாயிகள் காப்பீடு விதிகளுக்கு உட்பட்டு இருக்கும் போது அவர்களை காப்பீட்டு தொகை பெற தகுதியற்றவர்கள் என எப்படி முடிவு செய்ய முடியும் என விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

### உறக்கத்தில் வேளாண்துறை அமைச்சர்!

இதுகுறித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட துணை தலைவர் திருப்பந்துருத்தி சுகுமாரன் கூறியதாவது:-

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முற்றிலும் பொய்த்து போய்விட்டது. கடும் வறட்சி நிலவி வருகிறது. சாகுபடி பரப்பு 80 சதவீதத்திற்கும் கீழ் சரிந்து விட்டது. கள சூழ்நிலை இப்படி இருக்கும்போது விதைப்பு சான்றின் அடிப்படையில் பயிர் காப்பீடு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கிராமங்களில் குறுவை சாகுபடி செய்ய இயலாத விவசாய நிலங்கள் குறித்து முழுமையாக கணக்கெடுப்பு நடத்தாமல் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டு கணக்கெடுப்பு நடத்தியதாக வேளாண் துறையினர் கூறுவதை ஏற்க முடியாது.

காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் காவிரி சமவெளி மாவட்ட விவசாயிகளுக்கு பெற்று தராமல் தமிழக முதல்வர் விஜய் நிர்வாகத்தின் கீழ் அரசு அலுவலர்கள் அலட்சியமாக செயல்படுவது மனித தன்மையற்ற மனசாட்சி இல்லாத செயலாகும். இதுதான் மாற்றமா?... நியாயமா?... சட்டப்படி காவிரி சமவெளி மாவட்ட உழவர்களுக்கு இந்த தொகையை பெற்று தராமல் குறிப்பாக தஞ்சாவூர் மாவட்ட வேளாண் துறை அலுவலர்கள் தூங்கி கொண்டு இருப்பது நியாயமா? அதுவும் வேளாண்மைத் துறை அமைச்சர் உள்ள மாவட்டத்திலே இந்த நிலையா? என்று கேள்வி எழுப்பினார்.